

முச்சந்தி முரளி

"பிள்ளையார் கலியாணம் மாதிரித்தான் உந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குறதும்... கடைசி மட்டும் ஒண்டும் நடக்காது கண்டியளோ"


# உதயன்

சுடர் : 37 | கதிர் : 267 | சனிக்கிழமை 20 ஒகஸ்ட் 2022 | ஆவணி 04 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 | விலை : ரூ. 50


# உரிமைக் குரல்களை நசுக்கவே பயங்கரவாதத் தடைச்சட்டம்

## சிறிலங்கா அரசாங்கத்தை கடுமையாக கண்டிக்கின்றது மன்னிப்புச் சபை

**கொழும்பு, ஒகஸ்ட் 20**

குடியியல் உரிமைகளுக்காகப் போராடுபவர்களுக்கு எதிராக கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை சிறிலங்கா அரசாங்கம் பயன்படுத்துகின்றது என்று சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டியுள்ளது. 11 ▶



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையே விசேட சந்திப்பு ஒன்று நேற்று மாலை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. சந்திப்பில் கருத்துத் தெரிவித்துள்ள ஜூலி சங், ஜனநாயகம் பலப்படுத்தப்பட்டு மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் ஒரு நாட்டுக்கு அமெரிக்காவின் ஆதரவு கிடைக்கும் எனத் தெரிவித்துள்ளார். (அ-எ-22)

# பயங்கரவாதத் தடைச் சட்டம் மிக விரைவில் நீக்கப்படுமாம்

## கல்வியமைச்சர் சுசில் தகவல்



யாழ்ப்பாணம், ஓக.20

தற்போது நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் விரைவில் நீக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த 11 ▶

# உணவு நெருக்கடிக்குள் சிக்கவுள்ள சிறிலங்கா!

## சர்வதேச ஊடகம் ஆரூடம்

கொழும்பு, ஓக.20

நெற் செய்கை குறைந்துள்ளதால் சிறிலங்கா பெரும் உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. கடந்த வருடங்களில் சிறுபோகத்தில் இரண்டு மில்லியன் மெற்றிக் தொன்னாக இருந்த அறுவடை இனிவரும் காலத்தில் பாதியாகக் குறைவடையும் என்று பிரசித்தி பெற்ற சர்வதேச ஊடகமான 'தி ஜப்பான் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது. 11 ▶

# நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ரணிலுடன் மீண்டும் பேசத்தயார்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.20

பயனளிக்கும் மறுசீரமைப்புச் செயற்பாட்டின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் மீண்டும் பேச்சு நடத்த நான் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுத் தெரிவித்தார்.

மறுசீரமைப்புகளுக்கான புத்திஜீவிகள் ஒன்றியத்தின் விசேட கூட்டம், கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் 11 ▶

# அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் 90 நாள்களுக்கு தடுப்புக்காவல்

கொழும்பு, ஓக.20

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உட்பட மூவர் தடுப்புக் காவல் உத்தரவில் தடுத்து வைத்து விசாரணை செய்யப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். 11 ▶

# சுகாதாரக் கட்டமைப்பு கடைசிக் கட்டத்தில்!

## எச்சரிக்கின்றது ஐ.நா.

கொழும்பு, ஓக.20

சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடி, நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பை வீழ்ச்சியின் இறுதிக் கட்டத்துக்கு இட்டுச் சென்றுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சிறிலங்கா அதன் வரலாற்றில் மிக மோசமான சமூக - பொருளாதார நெருக்கடியின் மத்தியில் உள்ளது என்றும், கர்ப்பிணிப் பெண்களின் வாழ்வாதாரத்தை 11 ▶

# ஐ.நா. பணிப்பாளர் யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், ஓக.20

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி ஒத்துழைப்பு அலுவலகத்தின் ஆசிய - பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் டேவிட் மெக்லக்லன் கார் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

டேவிட் மெக்லக்லன் கார் கடந்த 16ஆம் திகதி உத்தியோகபூர்வ பயணமாக சிறிலங்கா வந்திருந்தார். அவர் பல்வேறு தரப்புக்களுடனும் சந்திப்புக்களை நடத்தி வருகின்றார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள அவர் நேற்றுக் 11 ▶




வவுனியா, ஓக.20

வவுனியாவில் விடுதி ஒன்று நேற்றுப் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுச் சோதனை செய்யப்பட்டதில் இரு பெண்கள் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த விடுதியில் இருந்து 30 துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன.

தேக்கவத்தையிலுள்ள விடுதி ஒன்றில் கலாசாரத்துக்கு 11 ▶

# கொரோனா; 6 பேர் பலி

கொழும்பு, ஓக.20

நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்தது.

உயிரிழந்தவர்களில் 30 வயதுக்குட்பட்ட பெண் ஒரு 11 ▶

# சிறிலங்காவை நம்பாதீர்கள் நிபந்தனைகள் விதியுங்கள்!

## சர்வதேச நாடுகளிடம் கோருகிறார் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஓக.20

ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, நேர்மை மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் தெளிவான நிபந்தனைகளுடன் சிறிலங்காவுக்கு உதவிகளை வழங்கவேண்டும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். 11 ▶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் பிரச்சினைகள் ஐ.நா.வில் பிரதிபலிக்கும்

## நோர்வே வெளிவிவகார அமைச்சின் இலங்கைக்கான விசேட அதிகாரி உறுதி

**கொழும்பு, ஓக. 20**
**எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமை பேரவை கூட்டத்தொடரில் தமிழர்களின் அனைத்துப் பிரச்சினைகளும் பிரதிபலிக்கும் என்று நோர்வே வெளிவிவகார அமைச்சின் இலங்கைக்கான விசேட அதிகாரி ஆன் கிளாட் உறுதியளித்துள்ளார்.**

நோர்வே வெளிவிவகார அமைச்சின் இலங்கைக்கான விசேட அதிகாரி ஆன் கிளாட்டுக்கும் தமிழ்க்கட்சித் தலைவர்களுக்கும் இடையில் கடந்த புதன்கிழமை இணையவழியில் சந்திப்பொன்று இடம்பெற்றது.
சந்திப்பில், தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலை தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் தமிழர்களின் பல பிரச்சினைகள் தமிழ்க்கட்சித் தலைவர்களால் எடுத்துரைக்கப்பட்டது. அதற்குப் பதிலளிக்கும் போதே ஆன் கிளாட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா.வில் பல்வேறு விதமான பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன. எனினும் அவை இலங்கை அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் நிராகரிக்கப்பட்டாலும் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதை அவதானிக்க முடிகிறது. தமிழ் கட்சித் தலைவர்களால் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமலாக் கப்பட்டோர் விடயம், காணி அபகரிப்பு, இனக்குடிப்பரம்பல் சிதைப்பு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுகள் நடைபெறுகின்றமை போன்ற பல பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன.
ஆனால் நிரந்தர அரசியல் தீர்வுக்கான கோரிக்கைகள் சர்வதேச சமூகத்தால் முன்வைக்கப்பட்டாலும் அதற்கான சாத்தியக்கூறுகள் இலங்கை அரசியலில் குறைவாகவே காணப்படுகின்றன.
தமிழ் மக்கள் சார்பாக கட்சித் தலைவர்களும் பிரதிநிதிகளும் தெரிவித்த பல்வேறு கருத்துக்களை நோர்வே அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வருவதோடு அவற்றை ஐ.நா.வில் பிரதிபலிக்கும் வகையில் அங்கத்துவ நாடுகளுக்கு நாம் முன்னெடுத்துச் செல்வோம்- என்றார். (ம-14)



## கோத்தாபய வருவது எனக்குத் தெரியாது!

### கைவிரித்தார் ரணில்

கொழும்பு, ஓக. 20
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இலங்கைக்கு வருவது குறித்து எனக்கு எதுவும் தெரியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அடுத்த வாரம் நாட்டுக்கு திரும்புகிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் அவரது வருகை குறித்து எனக்கு எதுவும் தெரியாது- என்று ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## நிலையான அமைச்சரவை அடுத்த வாரம் அமையும்!

### பெரமுனவுக்கே கணிசமான அமைச்சுகள்



கொழும்பு, ஓக. 20
பெரமுனவினருக்குக் கூடுதலான அமைச்சுகள் ஒதுக்கப்பட்டு, நிலையான அமைச்சரவையொன்று அடுத்த வாரம் அமைக்கப்பட வாய்ப்புள்ளது என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
சர்வகட்சி அரசாங்கத்தில் ஒன்றிணைய பிரதான எதிர்க்கட்சிகள் மற்றும் நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினர் மறுப்புத் தெரிவித்துள்ள நிலையில், அடுத்தகட்டமாக நிலையான அமைச்சரவையை அமைக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.
நிலையான அமைச்சரவையில் பிரசன்ன ரணதுங்க, ஜனக பண்டார தென்னகோன், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன, பவித்ரா வன்னியாராச்சி, எஸ்.எம்.சந்திரசேன, நாமல் ராஜபக்ச, ரமேஷ் பத்திரண, பந்துல குணவர்தன, சனத் நிஷாந்த, காஞ்சன விஜேசேகர ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு ஜனாதிபதியிடம் பொதுஜன பெரமுன பரிந்துரைத்துள்ளதாக அறிய முடிகிறது.
நிலையான அமைச்சரவையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜீவன் தொண்டமான், அதாவுல்லா ஆகியோருக்கும் அமைச்சுப் பதவிகள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## கொலைக் குற்றவாளிக்கு பொதுமன்னிப்பு எவ்வாறு?

### குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மைத்திரியிடம் வாக்குமூலம்

கொழும்பு, ஓக. 20
ரோயல் பார்க் கொலைக்குற்றவாளிக்கு பொதுமன்னிப்பு வழங்கியமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.
முன்னாள் ஜனாதிபதியின் கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து நேற்று முன்தினம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மூன்று மணிநேரம் வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளனர். பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
கடந்த 2005ஆம் ஆண்டு இராஜகிரியவில் உள்ள ரோயல் பார்க் காண்டோமினிய வளாகத்தில் இவோன் ஜோன்சன் என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் ஜயமஹா என்பவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.
2016ஆம் ஆண்டு குறித்த நபர் அப்போதைய ஜனாதிபதி மைத்திரியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


## இலங்கையில் நீதி, பொறுப்புக்கூறலை பிரிட்டன் தொடர்ந்தும் உறுதிசெய்யும்!

### பிரதமர் வேட்பாளரான ரிஷி சுனாக் தெரிவிப்பு

லண்டன், ஓக. 20
இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு நீதி வழங்குவதற்கான பொறிமுறைகளையும் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் போக்கையும் பிரிட்டன் தொடர்ந்து உறுதிசெய்யும் என்று தெரிவித்தார் பிரிட்டனின் பிரதமர் வேட்பாளரான ரிஷி சுனாக்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கைக்காகவும் எனது இதயம் இயங்குகின்றது. ஊழல் அற்ற ஜனநாயக இராணுவத்தின் செல்வாக்கு இல்லாத இலங்கையைக் காண்பதில் நான் விருப்பம் கொண்டுள்ளேன். இதனை சாதிப்பதற்கு மிகவும் கடினமான பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுடன் கூடிய உதவி தேவை.
ஆயுதமோதலின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற அநீதிகளுக்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்காக தமிழர்கள் நடத்திவரும் போராட்டங்களுக்கும், இலங்கைக்கு எதிராக சர்வதேச சமூகம் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நான் ஆதரவளிப்பேன். நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் பிரிட்டன் தொடர்ந்தும் முக்கியமான பங்களிப்பை வழங்கும்- என்றார். (ம)

# இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு இந்தியா ஆதரவு

கொழும்பு, ஓக. 20
சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் மறுசீரமைப்பு குறித்து இலங்கை மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களுக்கு இந்தியா எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பு வழங்கும் - இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.
தாய்லாந்தில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் 'இந்தோ - பசுபிக் பற்றிய இந்தியாவின் பார்வை' என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரைக்குப் பின்னர் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை, சர்வதேச நாணய நிதியத்திடம் மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களுக்கு இந்தியா எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பு வழங்கும். இந்த வருடம் மட்டும் இந்தியா 3.8 பில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்கியுள்ளது.
தொடர்ந்தும் இலங்கைக்கு இந்தியா ஆதரவுக்கரம் நீட்டும்- என்றார். (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிபொருள்கள் கிடைத்ததும்

# கிளிநொச்சியில் பரவலாக மணல் அகழ்வு தீவிரம்!

விவசாயிகள் கவலை

**கிளிநொச்சி, ஓக. 20**

**கண்டாவளை பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட கண்டாவளை, புளியம்பொக்கனை, தருமபுரம், உழவனூர், நெத்தலியாறு, கல்மடு என பல பகுதிகளில் மணல் அகழ்வு மீண்டும் இடம்பெற்று வருகின்றது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**



இதுதொடர்பாக அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மணல் அகழ்வு குறைந்திருந்தது. ஆனால் தற்போது எரிபொருள் சீராக வழங்கப்படும் நிலையில், விவசாயம் மேற்கொள்ளும் வயல்களில் வயல் உரிமையாளரின் அனுமதியின்றி தொடர்ச்சியாக மணல் அகழப்படுகின்றது. இது தொடர்பாக கனியவள பிரிவினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தற்போது ஒரு கிலோ அரிசி 250 ரூபாவுக்கு அதிகமான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் வயல் நிலங்கள் மணல் அகழ்வால் அழிவடைந்தால் இனிவரும் காலங்களில் விவசாயம் மேற்கொள்வதில் பல சிரமங்களை விவசாயிகள் எதிர்நோக்க வேண்டி வரும். எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ம-14,113)

மணற்காட்டில்

## சவுக்கு வெட்டினரென மூவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஓக. 20

வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட மணற்காடு சவுக்குமர வனாந்தரப் பகுதியில் அத்துமீறி உள்நுழைந்து சவுக்கு மரங்களை வெட்டிய குற்றச்சாட்டில் மூவர் கடந்த புதன்கிழமை யாழ். மாவட்ட வனவள பாதுகாப்பு திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினர் சட்டவிரோதமாக சவுக்கு மரங்களை வெட்டிய துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த மூவரைக் கைதுசெய்துள்ளனர்.

அவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. (ச-125)



## வெடிபொருள்களுடன் நபரொருவர் கைது!

கிளிநொச்சி, ஓக. 20

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இத்தாவில் பகுதியில் வெடிபொருள்களுடன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் என்று பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியிலுள்ள நபரொருவர் வீட்டில் வெடிபொருள்கள் வைத்திருக்கின்றார் என்று பளை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த வீட்டில் சோதனை நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டனர்.

அதன்போது 910 கிராம் வெடிமருந்து, கழற்றிய நிலையில் 2 மோட்டார் குண்டுகள், வெடிக்காத நிலையில் 3 மோட்டார் குண்டுகள் என்பன மீட்கப்பட்டன.

அதனையடுத்து வெடிபொருள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவரை பளை பொலிஸார் கைது செய்தனர். (ம-14,113,27)

## யாழ்.புதிய சந்தைக் கட்டடத்தில் ஆணொருவரின் சடலம் மீட்பு



யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ். நகரில் அமைந்துள்ள புதிய சந்தைக் கட்டடத் தொகுதியிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை யாழ். சந்தைக் கட்டடத் தொகுதியில் சடலமொன்று காணப்படுகிறது என வியாபாரிகளால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சிறப்புத் தேவையுடைய ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-27,26)

## நெல் கொள்வனவில் உத்தரவாத விலை!

வவுனியாவில் நடவடிக்கை

வவுனியா, ஓக. 20

அரசாங்கத்தின் உத்தரவாத விலையில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஊடாகவும் நெல்லைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் இந்திரா ரூபசிங்க தெரிவித்துள்ளார்.


வவுனியா மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விவசாய அமைப்பு பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுபோக நெற்செய்கை இடம்பெற்று வருகின்றபோதும் அரசாங்கத்தின் உத்தரவாத விலையை விடக் குறைவான விலையில் அரிசி ஆலை உரிமையாளர்களால் நெல் கொள்வனவு செய்யப்படுவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், உத்தரவாத விலையில் நெல்லைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

அதற்கமைவாக வவுனியா வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் இயங்கு நிலையில் அரிசி ஆலை இருப்பதால் அதனூடாக நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது. அதற்காக 10 மில்லியன் ரூபா நிதியை வழங்குமாறு மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏனைய பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவும் நெல்லைக் கொள்வனவு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (ம-14,18)





## மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளான கார்

நீர்வேலியில் சம்பவம்

கொழும்பு, ஓக. 20

நீர்வேலி பூதர்மடம் பகுதியில் காரொன்று மின்கம்பத்துடன் மோதி நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளாகியுள்ளது. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் - நெல்லியடி நோக்கிச் சென்ற காரே இவ்வாறு மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-27)

காணி விற்பனைக்கு

யாழ் நாவற்குழியில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

பார்வை இடும் நேரம் :காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி

தொடர்புகளுக்கு

076 490 5403, 076 491 2493,076 490 6029

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பகாலம் நீடிப்பு!

கொழும்பு, ஓக. 20
2022 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. அதன்படி எதிர்வரும் 26ஆம் திகதி வரை உயர்தரப்பரீட்சைக்கான விண்ணப்பபடிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை விண்ணப்பதாரர்கள் இணையவழி மூலம் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கக் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(ச-இ)

நல்லூர் பெருந்திருவிழாவில்

# சிலரின் செயற்பாட்டால் கலாசாரம் அழிகின்றது!

## இந்து சமயப் பேரவையின் தலைவர் கவலை

**யாழ்ப்பாணம், ஓக. 20**
**நல்லூர்க் கந்தசுவாமி கோயில் திருவிழாவில் பங்கேற்கும் சிலரின் செயற்பாடுகள் எமக்குப் பெருங் கவலையை ஏற்படுத்துகின்றன என்று இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நல்லூர் பெருந்திருவிழாவில் பெருந்திரளாகப் பக்தர்கள் திருவருட் பொலிவோடு பங்குபற்றி வருவது எமது யாழ்ப்பாண மண்ணின் தனித்துவத்தைப் பிரதிபலிப்பதாகவே காணப்படுகிறது. எனினும் சில இளைஞர்கள் ஆசாரங்களை மறந்து மேலங்கியுடனும் வேறு ஆடைகளுடனும் இந்த புனிதமான பெருவிழாவில் பங்குகொள்ள முயல்வது நாகரீகமற்ற செயலாகவே காணப்படுகிறது. இவர்களின் போக்கு இவர்கள் சைவர்கள்தானோ என எம்மால் நம்ப முடியாதுள்ளது.
மேல்நாட்டவர்கள், அரசியல் தலைவர்கள், இராணுவத்தினர் போன்றோர் வேட்டியணிந்தே வழிபாட்டில் ஈடுபடுகின்றனர்.
அவர்களைக் காண எமக்கு மகிழ்வைத்தருகின்ற போதும் எம்மவரில் சிலர் எமது பெருமையை மறந்து வாழ்கிறார்கள். பொலிஸார்கூட மேலங்கி இல்லாது கடமையை மகிழ்வுடனாற்றுகிறார்கள். இது இவ்வாறிருக்க நாம் ஏன் எமது பாரம்பரியங்களைப் போற்றாதிருக்க வேண்டும்?
எமது சைவத்தமிழ்ப் பண்பாட்டை நாம் போற்றாது விட்டால் யார் போற்றப்போகிறார்கள்?. ஆதலால் ஆலய நிர்வாகத்தினரதும், தொண்டர்களதும் அன்பான வேண்டுகோளுக்கிணங்க செயற்படுங்கள். இதன்மூலம் சைவத் தமிழ்க் கலாசார மறுமலர்ச்சி ஏற்படட்டும். சைவாசார சீலர்களாக ஆண்கள் வேட்டி, சால்வை அணிவதும் பெண்கள் சேலை அணிவதும் எமது பாரம்பரிய மரபாகும். இதை நாம் இழக்கலாமா?
எமது சமூகம் வாழ்வியல் சடங்குகளையும், பாரம்பரியங்கள் அனைத்தையும் மெல்லமெல்ல இழந்து கொண்டு வருகின்றது. இவற்றைக் காப்பாற்ற நாம் என்ன தியாகத்தையும் செய்யத் தயாராகவிருக்கவேண்டும்.
ஆதலால், அனைவரும் எமது அன்பான வேண்டுகோளை ஏற்று சைவாசார சீலத்தைப் பேண பரிபூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும் -என்றார். (ம-14-125)

## பல்கலை அனுமதிக்கு தே.அ.அ. கட்டாயம்!

கொழும்பு, ஓக. 20
இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும்போது தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் கட்டாயம் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
தேசிய அடையாள அட்டை இல்லாதபட்சத்தில் வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணத்தை முன்வைக்கும் விண்ணப்பதாரர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. எனினும் அந்த ஆவணத்தின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியாது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.
(ச-இ)



## தோணிக்கல் கல்வெட்டு மக்களின் பார்வைக்கு

வவுனியாவில் உள்ள அனுராதபுர கால 'தோணிக்கல் கல்வெட்டுப்' பகுதியை பொதுமக்கள் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
யுத்த காலத்தில் பாதுகாப்புக்காக மூடப்பட்டிருந்த அனுராதபுர கால தோணிக்கல் கல்வெட்டுப் பகுதி மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், சுற்றுலா இடமாக மாற்றியமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.
தோணிக்கல் கல்வெட்டில் அமைந்துள்ள தொல்பொருள் நினைவுச் சின்னங்கள் 15 ஏக்கர் பரப்பளவில் காணப்படுகின்றன. இதனை அண்மித்து 2 புராதன குளங்கள் உள்ளிட்ட பல தொன்மை வாய்ந்த பொருள்களும் காணப்படுகின்றன. அவற்றை சிவில் பாதுகாப்பு படை அதிகாரிகளின் ஆதரவுடன் சுற்றுலா இடமாக மாற்றுவதற்கு தொல்பொருள் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-14-18)

## முதியவர் மாயம்



தொண்டைமானாறு, வல்லை வீதியைச் சேர்ந்த முதிவர் ஒருவரைக் காணவில்லை என்று வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
குருமூர்த்தி மயில்வாகனம் (வயது74) என்பவரையே கடந்த 17ஆம் திகதியில் இருந்து காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர் இறுதியாக நீல நிர சாரமும், நீல நிற பனியனும் அணிந்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
சுமார் 5 அடி 9 அங்கும் உயரம் கொண்ட இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
(எ-23)

**தேவை**
தோட்ட வேலைக்கு வேலையாட்கள் தேவை.
077 871 2347

**பணிப்பெண் தேவை**
சங்கத்தானை. சாவகச்சேரியில் வசிக்கும் வயோதிப பெண் ஒருவரை தங்கி நின்று பராமரிக்க பணியாள் தேவை.
சம்பளம் பேசீர்த்தீர்மானிக்கலாம்.
077 793 8221

**ஏணிப்படி விற்பனைக்கு**
மேல் மாடிக்கு ஏறுவதற்கான இரும்பு மற்றும் அலுமினியத்தினால் ஆன ஏணிப்படி விற்பனைக்கு உண்டு.
077 223 1112

**பெயர் மாற்றம்**
இல. 116, 4 ஆம் குறுக்கு வீதி, மணியந் தோட்டத்தில் வசிக்கும் **சோமா** ஆகிய நான் எனது பெயரை **காமலீற்றா** என மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் **காமலீற்றா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.
(cs 20378) (2.6) **காமலீற்றா**

## மின்கம்பியில் சிக்கி யானை உயிரிழப்பு

வவுனியா, ஓக. 20
வவுனியா- கணேசபுரம் பகுதியில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட மின்கம்பியில் சிக்கி காட்டுயானை ஒன்று நேற்றுமுன்தினம் உயிரிழந்தது என்று வவுனியா வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
அதனையடுத்து அனுமதியின்றி தோட்டத்தில் மின்சாரத்தை இணைத்த தோட்டத்தின் உரிமையாளரான 50 வயதுடைய பெண்ணொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.
இலங்கையில் யானை - மனித வாழிட மோதலால் இரு தரப்பிலும் இறப்புகள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-14-110)

**காணவில்லை**



தொண்டைமானாறு, வல்லை ரோட் இல் வசிக்கும் **மயில்வாகனம் குருமூர்த்தி** (வயது - 75) அவர்களை கடந்த இரண்டு நாட்களாக (17 ஆம் திகதி முதல்) காணவில்லை. இவரைக் கண்டவர்கள் உடன் அறியத்தரவும். கடைசியாக நீல நிற சாரம், நீல நிற ரிசேட் அணிந்திருந்தார்.
075 399 6654, 077 4206 565, 077 078 0778

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பேச்சுப் பல்லக்கு: தம்பி கால்நடை!

'இலங்கை அரசாங்கத்தால் தடைநீக்கம் செய்யப்பட்டுள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புகள், புலம்பெயர் தமிழர்கள் எமக்கெதிராகச் செயற்பட்டால், மீண்டும் அந்த அமைப்புகளுக்கும் தனிநபர்களுக்கும் தடை விதிக்கப்படும்' என்று தெரிவித்துள்ளார் பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜகத் குமார.

அரசாங்கம் டொலரை எதிர்பார்த்துத்தான் இந்தத் தடைநீக்கத்தைச் செய்துள்ளது. எனவே இந்தத் தடைநீக்கம் எவ்வளவு காலம் நடைமுறையில் இருக்கும்? தடைநீக்கத்தை நம்பி இலங்கையில் முதலிடும் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளுக்கு என்ன உத்தரவாதம் இங்குள்ளது? உள்ளிட்ட கேள்விகள் இலங்கை அரசாங்கத்தை நோக்கி எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கையில் அந்தக் கேள்விகளின் முக்கியத்துவத்தை – கனதித்தன்மையை – காலக்கண்ணாடியாக நிரூபித்திருக்கின்றார் ஜகத் குமார.

அதேநேரம் ஜகத் குமாரவின் கருத்தை ஒருபோதும் அவரது தனிப்பட்ட கருத்தாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில், பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தின் வைத்து வெளிப்படுத்தப்பட்ட இந்தக் கருத்துக்கள் பெரமுனவின் கருத்துக்களாகவே கொள்ளப்படவேண்டும். ஆயிரம் பிடுங்குப்பாடுகள், அதிருப்திகள், எதிர்ப்புகள் இருந்தாலும் பெரமுனதான் தற்போது ஆளுங்கட்சி. ஆதலால், ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாகவே இவ்விடயத்தில் அமைகின்றார் ஜகத் குமார.

அரசாங்கத்தின் தடைநீக்கத்தின் பின்னரான கபடத்தனத்தையும் அதன் சதிச் செயல்களையும் புரியாத முட்டாள்களல்லர் தமிழர்கள். ஆதலால், தடைநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் தடை விதிக்கப்படலாம் என்ற சாரப்பட்ட இந்தக் கருத்து, தமிழர்களுக்கு ஒருபோதும் புருவங்களை உயர்த்தக்கூடிய ஆச்சரியமான சொற்றொடராக இருக்கப்போவதில்லை. ஆனால், ஆட்சியாளர்களின் இதய சுத்தியை – எண்ணவோட்டத்தை – சிந்தனை மட்டத்தை சர்வதேசம் ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டிய காலமிது. அத்துடன் நல்லிணக்கத்தை ஆத்மார்த்தமாக நேசிக்கும் – எதிர்பார்த்திருக்கும் சிங்கள உறவுகளும் இத்தகையவர்கள் தொடர்பில் தீர்க்கமான தெளிவுபடுத்தல்களை தமக்குத்தாமே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

'பேச்சுப் பல்லக்கு: தம்பி கால்நடை' என்ற சொற்றொடருக்கு இலக்கணமாகத்தான் ஜகத் குமாரவின் கருத்துக்கள் அமைகின்றன. அதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். ஆனால், இங்கே விவாதப்பொருள் என்னவென்றால், மீண்டும் தடைகளை விதிக்கக் கூடிய சட்ட ஏற்பாடுகளை – சாத்தியக்கூறுகளை வைத்துக்கொண்டுதான் புலம்பெயர் தமிழர்களுக்கும் தமிழ் அமைப்புகளுக்கும் தடைநீக்கம் செய்யப்படுகின்றது என்றால், எந்த நம்பிக்கையில் இவர்கள் எதிர்பார்க்கும் 'டொலர் முதலீடு' நாட்டுக்குள் வரும்?. ஜகத் குமார போன்றோரின் இத்தகைய கருத்துக்களும், செயற்பாடுகளும் இலங்கையில் முதலிட வேண்டும் என்ற பிரயாசையில் உள்ளவர்களையும் கோபம்கொள்ள வைக்குமே அன்றி வேறெதுவும் இதில் நடந்துவிடப் போவதில்லை.

எல்லாவற்றுக்கும் மேல், புலம்பெயர் அமைப்புகளுக்கும், புலம்பெயர் தமிழர்களுக்கும் தடைகளை நீக்குவதால், நன்மை இலங்கைக்கே தவிர புலம்பெயரிகள் தரப்புக்கல்ல. தற்போது இலங்கைக்குத்தான் புலம்பெயரிகளின் உதவிதேவை. மாறாக புலம்பெயரிகளுக்கு இலங்கை தேவையில்லை. இந்தக் குறைந்த பட்சப் புரிதலை பெரமுனவினர் ஏற்படுத்திக்கொண்டு, அதற்கேற்ப கருத்துக்களை வெளிப்படுத்துவதும், பரிமாறுவதுமே அவர்களுக்கும் நல்லது: இலங்கைக்கும் நல்லது.

விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்றால் பரவாயில்லை: இங்கே அங்கப்பிரதட்சிணம் செய்த பின்னரும் கூட உடலில் ஒரு சொட்டு மண்ணும் இல்லை என்கிறார்களே!. என்னவென்று சொல்ல...?

நாளொரு நல்வார்த்தை

"நீங்கள் எதையாவது புரிந்து கொள்ள விரும்பினால், அதன் ஆரம்பத்தையும் அதன் வளர்ச்சியையும் கவனியுங்கள்"

- அரிஸ்டோட்டில்




# செப்ரெம்பர் மாதம் பணவீக்கம் உச்சம்!

## அதன்பின்னர் இயல்பு திரும்பும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 20**

**செப்ரெம்பர் மாதம் இலங்கையின் பணவீக்கம் உச்சத்தை எட்டக்கூடும் என்றும் அதன் பின்னர் பணவீக்கம் குறைவடையும் என்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- செப்ரெம்பர் மாதத்தில் ஓர் உச்சப் பணவீக்கம் ஏற்படும். ஆனால், முன்னர் எச்சரிக்கப்பட்டதைப் போன்று 70 வீதமான பணவீக்கம் இருக்காது. நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதால் அத்தகைய ஆபத்து இல்லை. பணவீக்கத்தின் வேகம் எதிர்பார்த்ததை விட வேகமாக மிதமானதாக இருக்கும். அதன் பின்னர் மெல்லமெல்ல நிலைமை சுமுகத்துக்கு வரும் - என்றார். (ம)

# அழிவை ஏற்படுத்தும் மரஅணிலை தேசிய விலங்காக ஏற்க முடியாது

*விவசாய அமைப்புகள் போர்க்கொடி; ஆராய்வதற்குத் தனிக்குழு அமைப்பு*

கொழும்பு, ஓக. 20

மர அணிலால் இலங்கையின் விவசாயத் துறை கடும் பாதிப்பை எதிர்கொண்டுவரும் நிலையில், அதை தேசியவிலங்கு என்ற அந்தஸ்தில் இருந்து நீக்குவது தொடர்பில் ஆராய்வதற்குத் தனிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்ததாவது:-

மர அணில் பாதிப்பால் தென்னை, கொக்கோ தோட்டங்களில் விளைச்சல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டின் பயிர்வளம் அழிவடைகின்றது. பயிர்களை சேதப்படுத்தும் விலங்கினங்களில் அணில் முதன்மையான இடத்தில் உள்ளது. அதனால் அதைத் தேசிய விலங்காகக் கொண்டமை பொருத்தமானது அல்ல என பல விவசாய அமைப்புகள் ஆலோசனை சமர்ப்பித்துள்ளன.

அத்துடன் இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட, அழிந்துவரும் அச்சுறுத்தலுக்கு உள்ளான பொருத்தமான மற்றுமொரு விலங்கை தேசிய விலங்காகப் பரிந்துரைக்குமாறு விவசாய அமைப்புகள் கோரியுள்ளன. இந்த நிலையில் விவசாயம் மற்றும் வன உயிரிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளடங்கிய குழுவொன்று இது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

நாளை
21.08.2022
ஞாயிற்றுக்கிழமை
ஆவணி 05
சுபநேரம் : 09.05 - 10.35
ராகுகாலம்: 04.35 - 06.05
நல்லூர் கைலாசவாகனம் — மாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலையின் 160 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் வழங்கலும் கடந்த திங்கட்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. பாடசாலையின் அதிபர் த.விக்கினேஸ்வரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக பிரான்ஸிலிருந்து வருகைதந்த பாடசாலையின் பழைய மாணவர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினர். (ம-14)

# நல்லூரில் பஞ்சதள ஸ்ரீ குமார கோபுர கலாசாபிஷேகம்!





நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வட திசையில் குபேர வாயில் கோபுரத்துக்கு உட்புறமாக, உட் பிரகாரத்தில் அமைக்கப்பட்டுள்ள 'குபேர திக்கு குமார வாசல் குமார கோபுர கலாசாபிஷேகம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு பக்தர்கள் சூழ வெகுவிமரிசையாக இடம்பெற்றது. (ச-20)

## விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, ஓக. 20

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த இரு பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு வடமாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவை தரம் II, தரம் IIIஐச் சேர்ந்த அதிபர்களிடமிருந்து வலயத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது வலயக் கல்வி அலுவலகத்தில் விண்ணப்பத்தைப் பெற்று ஓகஸ்ட் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவேண்டும் என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார்.

பாடசாலை வகை IIIச் சேர்ந்த மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை, வகை III ஐச் சேர்ந்த கைதடி சேது காவலர் வித்தியாலயம் ஆகியவற்றில் காணப்படும் அதிபர் வெற்றிடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (எ-9)




யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்துக்கு என்று ஒரு தொகுதி திறன் வகுப்பறைச் சாதனங்களை அண்மையில் வழங்கினார். (ச-17)

## புதுக்குளம் சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம்

வவுனியா, ஓக. 20

வவுனியா, புதுக்குளம் அருள்மிகு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.



ஜெ.மயூரக்குருக்கள் தலைமையில் விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து கொடியேற்றத் திருவிழா இடம்பெற்றது. சித்திவிநாயகர் உள்வீதி, வெளி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலித்தார்.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் மஹோற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 25 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 26 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-110)

## மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக. 20

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.15 மணி முதல் 9.44 மணி வரை இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.04 மணி முதல் கிரியைகள் ஆரம்பமாகி மாலை 4 மணி முதல் விநாயகர் வழிபாடு இடம்பெறும். அதனைத்தொடர்ந்து மாலை 4.30 மணி முதல் இரவு 7 மணி வரை பால் காப்பு சாத்துதல் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-14)

## முரசுமோட்டை வித்தியில் சின்னம் சூட்டும் நிகழ்வு

கிளிநொச்சி, ஓக. 20

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் மாணவர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வும் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

பாடசாலை முதல்வர் க.கருணானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வித்தியாலயத்தின் பழைய மாணவனும் பிரான்ஸ் ஒன்றியத்தைச் சேர்ந்தவருமான கிருபானந்தன் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கான சின்னத்தை சூட்டி வைத்தார். (ம-14,113)

## வெளிவந்தது ஞானச்சுடர்

யாழ்ப்பாணம், ஓக. 20

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியின் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் மாதாந்தோறும் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' நூலின் கடந்த சித்திரை, வைகாசி மாதத்துக்கான 292, 293 ஆவது மலர்கள் வெளிவந்துள்ளன. (ம)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்துக்காக செலவுகளை மேற்கொள்வீர்கள். விருந்து விசேஷம் என செல்வீர்கள். வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பழைய பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். எதிர்பாராத செலவு உண்டாகும்.

**இடபம்:** செலவுகள் கட்டுப்படும். உங்கள் மனதுக்குப் பிடித்தவற்றில் ஈடுபடுவீர்கள். உடலும் மனமும் மகிழும் வகையில் இன்றைய பொழுது அமையும். நண்பர்கள் தேடி வருவர்.

**மிதுனம்:** வரவுக்கு ஏற்ற செலவுகளை சந்திப்பீர்கள். நினைத்த செயலைஉறுதியுடன்முடிப்பீர்கள். புதிய சிந்தனைகள் மேலோங்கும். மதியம் வரைசுறுசுறுப்பாக செயற்படுவீர்கள்.

**கடகம்:** முயற்சிகளில் வேகம் உண்டாகும். மதியத்துக்கு மேல் வியாபாரத்தில் பணம் அதிகரிக்கும். தொழிலில் புதிய யுக்தியைக் கையாள்வீர்கள். நண்பர்களால் மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்:** உங்களுடைய செயல்களில் இழுபறி உண்டாகும். ஆன்மிக விருப்பம் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி நீடிக்கும். குழப்பங்களில் இருந்து விடுபடுவீர்கள்.

**கன்னி:** இன்று உங்களது மனம் படபடப்பாகவே இருக்கும். நிம்மதி தேவையான நாள். மதியத்துக்கு மேல் உங்களுடைய எதிர்பார்ப்பு நிறைவேறும். மகிழ்ச்சியான நாள். நேற்று இருந்து வந்த சங்கடம் விலகும்.

**துலாம்:** .வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். எதிர்பாராத பிரச்சினைகளை இன்று சந்திப்பீர்கள். மற்றவர்களின் தொந்தரவால் மனம் அவதிப்படும். குடும்பத்தில் நெருக்கடி அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** தம்பதியரிடம் இருந்து வந்த பிரச்சினை விலகும். குடும்பத்தில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி கூடும். குடும்பத்தினரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** உங்கள் மன நிலையை பாதிக்கும் வகையில் சில நிகழ்வு நடைபெறும். எதிர்பார்த்தவற்றில் திருப்தியான நிலை ஏற்படும். தர்ம சிந்தனை உங்களைப் பாதுகாக்கும். உங்களின் பணப்புழக்கம் அதிகரிக்கும்.


**மகரம்:** குடும்பத்தினருடன் பொழுதைக் கழிப்பீர்கள். மனதுக்கினிய சம்பவங்கள் நடைபெறும். திட்டமிட்டு செயற்படுவதால் உங்களுக்குத் தேவையான ஒன்றை அடைவீர்கள்.

**கும்பம்:** தொழிலில் நிதானம் தேவை. முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். தொழிலில் விழிப்புணர்வு தேவைப்படும் நாள். தாய்வழி உறவினர் ஒருவர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்:** உங்களுடைய செயல்களில் தீவிரம் காட்டுவீர்கள். நிதி நிலை சீராகும். குடும்பத்தினரின் தேவையறிந்து செயற்படுவீர்கள். உங்களுடைய செல்வாக்கு உயரும். புதிய முயற்சி வெற்றி பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 18 - 03 - 1947

மறைவு 21 - 07 - 2022

கடந்த 21.07.2022 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

## அமரர் திரு. பொன்னுத்துரை கனேசரட்ணம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் இன்று (20.08.2022) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

(CS 20367) (3/6)

குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 11 10 1933

உதிர்வு 31 08 2021

## திருமதி சிவலிங்கம் தங்கம்மா


திதி : நவமி அபரபட்ஷ (20.08.2022)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் மாத்தளையை வதிவிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி திருமதி. சிவலிங்கம் தங்கம்மா அவர்களின் முதலாம் ஆண்டு நிகழ்வுகள் இன்று (20.08.2022) எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வுக்கு வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மகள் - சிவலிங்கம் மருதமணி
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

பிரதான வீதி,
மாத்தளை.

# மரண அறிவித்தல்



பிறப்பு 30 . 03 . 1947

இறப்பு 14 . 08 . 2022

## வேலாயுதம் இராஜநாயகம்

(ஓய்வுநிலை பொது சுகாதார பரிசோதகர்)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளாம்போக்கட்டி கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு.வேலாயுதம் இராஜநாயகம் அவர்கள் கடந்த (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - வேலாயும் மற்றும் வேலாயுதம் இராணி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருளப்பு - பார்பரம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், பிரான்சிஸ்காவின் அன்புக் கணவரும், பிராங்கிளினின் பாசமிகு தந்தையும், அஜீனாவின் அன்பு மாமனாரும், றியானாவின் பாட்டனாரும், அரியநாயகம் (Marine Engineer), காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் (பாக்கிஸ்தான்), குணநாயகம் (யாழ்ப்பாணம்), பிரான்சில் வசிப்பவர்களான பிரேமச்சந்திரன், உதயகுமார், கமலாதேவி, சுசீலாதேவி, நாகேஸ்வரி, சுலோசனாதேவி (கொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மேரிகுளோரிடா (பிரான்ஸ்), காலஞ்சென்ற ருக்மணி (வைத்தியர்), காலஞ்சென்றவர்களான பாக்கியராசா, குணசேகரம் மற்றும் சந்திரசேகரம் (பிரான்ஸ்), சிவராசா (கொலண்ட்) ஆகியோரின் மைத்துனரும், யூயினி (லண்டன்) அவர்களின் சித்தப்பாவும், பிரான்சில் வசிப்பவர்களான ஆனோல்ட், றொனால்ட், விதுசன், சோபி, அர்ச்சனா ஆகியோரின் பெரியப்பாவும், சசிகலா, சசிகரன், சசிதரன், தணிகைக்குமரன், கஜன், பிரதீப், தினேஷ், பிரசாந், பிரதாப், பிரியங்கா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க நிகழ்வு நாளை (21.08.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அல்லாரை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இறுதிச்சடங்கு வழிபாட்டுடன் அல்லாரை சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளாம் போக்கடி,
கொடிகாமம்.

(cr 37084) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 04 - 11 - 1931

மறைவு 15 - 08 - 2022

## திருமதி அன்னம்மா தருமதுரை

யாழ். முள்ளானை இளவாலையைப் பிறப்பிடமாகவும், கனடா Scaborough வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா தருமதுரை அவர்கள் கடந்த (15.08.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - பார்வதியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அருளம்பலம் தருமதுரை அவர்களின் அன்பு மனைவியும், சந்திரலீலா, காலஞ்சென்ற இந்திரலீலா மற்றும் புஸ்பலீலா, வசந்தலீலா, இராசாக்கிருஷ்ணன், காலஞ்சென்ற அசோக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான கண்ணாத்தைபிள்ளை, நடராசா, நல்லபிள்ளை, இராமசேது, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகரட்ணம், விக்னேஸ்வரராஜா, சிறீஸ்கந்தராஜா, ராஜலஷ்மி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, கனகாம்பிகை, தம்பிராசா, சதாசிவம், நவரத்தினம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், நாகம்மா, தவமணி ஆகியோரின் அன்புச் சகலியும், கஜந்தன், செந்தூரன், அபிராமி, தணிகாஷ், தெவின், கஸ்தூரி, துர்சிகா, சிந்துஜன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சஞ்சனா அவர்களின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.08.2022) சனிக்கிழமை அஞ்சலிக்காக (chapel Ridge Funeral Home & Cremation Centre (கனடா) வைக்கப்பட்டு நாளை (21.08.20222) ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைகள் மாலை 5.30 மணியளவில் Highland Hills Crematorium (கனடா), நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

41/15 மருதமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

077 283 3627

வசந்தலீலா (மகள்)
சிறீஸ்கந்தராஜா (மருமகன்)

(CS 20361)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 01 . 1943



மறைவு 19 . 08 . 2022

## திருமதி சுப்பிரமணியம் லோகாம்பிகை

பெரியபருத்தி, புலோலி தெற்கு, புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் லோகாம்பிகை 19.08.2022 வெள்ளிக்கிழமை இறைவனடி சேரந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், வசந்தி, பகீரதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசலிங்கம், கலைவாணி ஆகியோரின் அன்பு மாமியும், தனுஜா, ரமணன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அருவி, ஆழி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

திருமதி வசந்தி கணேசலிங்கம் (கண்டி/புலோலி) - 077 618 6452

திரு.சு.பகீரதன் - 077 235 8415

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 1955 . 10 . 26



இறப்பு 2022 . 08 . 17

**அமரர் கனகலக்சுமி சுந்தரலிங்கம்**

**(ஓய்வுபெற்ற உப அதிபர்**

**யாழ்/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)**

திறந்த மனமும் திசை விரியத்தேர்ந்த நல்லறிவாற்றலும்
செறிந்த ஞானச்சிந்தனையும் செயலிலாண்மை
ஆளுமையும் கொண்டவராய்
புனித ஜோண் பொஸ்கோவில் பணியாற்றிய
அன்னாரின் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச்சமூகம்**

**யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.**

# கண்ணீர் அஞ்சலி

எமது கடையில் பணிபுரியும்
**பிரசாந்தன்**
அவர்களின் அம்மம்மா

**திருமதி துரைராஜா கௌரீஸ்வரி**

**(யோகம் அக்கா)**

அவர்கள் காலம் ஆன செய்தி
அறிந்து ஆழ்ந்த துயர்
அடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!




பிரிவால் துயருறும்

**வினோ நகைப் பூங்கா**

**உரிமையாளரும், ஊழியர்களும்.**

# மரண அறிவித்தல்



பிறப்பு 14.05.1974

இறப்பு 12.08.2022

## திரு. இராமலிங்கம் ரகுராம் (அப்புச்சி)

யாழ் - பளை - கச்சார் வெளியைப் பிறப்பிடமாகவும் கனடா - மொன்றியலை வதிவிடமாகவும் கொண்ட திரு. இராமலிங்கம் ரகுராம் (அப்புச்சி) அவர்கள் கடந்த (12.08.2022) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராமலிங்கம் - சிவபாக்கியம் அவர்களின் அன்பு மகனும், சிவானந்தன் - அருந்தவமணி அவர்களின் அருமை மருமகனும், சிவாஜினி யின் அன்புக் கணவரும், சந்தோஷ், அனிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தை யும், சிவராம் (லண்டன்), ஜெயராம், சிவாஜினி (சுபா), கிரிராம், சுதர்ஜினி, கங்கா, ஸ்ரீராம் (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரரும், பாரதி (லண்டன்), மனோகரி, வரதராஜா, கவிதா நந்தினி, சிவகுமார், கமலதாஸன், கேசவன், பிரதாப் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், அபிராமி, அஸ்வின், ஜனனி, சுகஸ்த்திகா, ரித்திஸ் ஆகியோரின் சித்தப்பாவும், சிந்துஜா, சதுஸ், லதுசா, நிதுஷா, அக்ஷே, அன்விதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கர்ணியின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (21.08.2022) ஞாயிற்றுக்கிழமை 55, Rueginice, Montreal, QC, H4N1J7இல் அமைந்துள்ள Aeterna Funeral Home இல் பிற்பகல் 5.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு மறுநாள் (22.08.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**

**இராமலிங்கம் குடும்பத்தினர்**


**தொடர்புகளுக்கு:**

இராமலிங்கம் – சிவபாக்கியம் (தந்தை – தாய்) : 514 385 4884
சந்தோஷ் (மகன்) : 5144312502, சிவராம் (அண்ணா) : 447968608876,
ஜெயராம் (அண்ணா) : 5145662553, கிரிராம் (தம்பி) : 5149837201,
ஸ்ரீராம் (ஹரி–தம்பி) 5146174804, வரதன் (மைத்துனர்) 5149620024,
சிவகுமார் (மைத்துனர்) : 6477729904, கமல் (மைத்துனர்) 5148397201
சிவலோகநாதன் (அத்தான்) : 077 0560915 (இலங்கை)

(CR 37088) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆம் மாத நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 27 - 07 - 1941

மறைவு 16 - 04 - 2022

## கலாநிதி இராஜதுரை மதனாகரன் (வயது- 80)

(முன்னாள் புவியற்றுறைப் பேராசிரியர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணக் கல்லூரி - வட்டுக்கோட்டை)

யாழ். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியை வாழ்விடமாகவும், கனடா (Toronto) வாழ்விடமாகவும் கொண்ட இராஜதுரை மதனாகரன் அவர்களின் 4 ஆம் மாத நினைவஞ்சலியும், நன்றிநவிலலும்.

அன்னார் கடந்த (16.04.2022) சனிக்கிழமையன்று (கனடா (Toronto) இல் இறைபதம் அடைந்தார். காலஞ்சென்ற இராஜதுரை, மனோன்மணி இணையரின் மகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கனகரத்தினம் தம்பதிகளின் மருமகனும், பாலேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், கருணாகரன், தினகரன், காலஞ்சென்ற பிரபாகரன், பாஸ்கரன், அம்பிகா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தயாபரன், அஜந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெனிபர் அவர்களின் அன்பு மாமனாரும், சஞ்சே, பிரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (17.04.2022) ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றன. மரணச்செய்தி கேட்டு அவரது உறவினர்கள், நண்பர்கள், அன்பு மாணவர்கள், மற்றும் இந்தத் துக்கசெய்தியை அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறியவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

பாலேஸ்வரி மதனாகரன்

(20323) (2/6)

# கூட்டுறவு தினவிழா

கொடிகாமம் ஓக. 20

100 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க தலைவர் இ.அ.ஆனந்தராசா தலைமையில் கொடிகாமத்தில் அமைந்துள்ள தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க வளாகத்தில் இன்று சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ய-159)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 - 01 - 1945

மறைவு 31 - 08 - 2021

## அமரர் பாலு கணேஸ்

ஆண்டொன்று கடந்தாலும்
மீண்டிடாத நினைவுகளுடன்
தந்தையே உங்களுடைய
சிந்தனையில் உறைந்துள்ளோம்
விந்தைமிகு உலகினில்
விடியலைத் தேடிடுவோம்
முந்தைய வினைப் பயனை
முடித்து நீங்கள் நிலை பெற்று
விண்ணுலக சுவர்க்கத்தைப்
பெற்றிட வேண்டுகின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்

(CS 20346) (3/6)


# 4 ஆம் டோஸ் பெறாவிடின் கொரோனா அதிகரிக்கும்

கொழும்பு, ஓக. 20

கொரோனா நோய்க்கு எதிரான 4 ஆவது டோஸ் பெறாவிட்டால், பதிவாகும் நோய்த் தொற்றுகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் நாளாந்தம் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ண்ணிக்கை 10 மடங்கு அதிகரித்துள்ளது. தினசரி தொற்றுக்களின் எண்ணிக்கை சராசரியாக 200 இனைத் தாண்டியுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-14,இ)

# 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 22.07.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர் வன்னியசிங்கம் ராஜ்குமார் [தாடி மாமா]



அவர்களின் சிவபதப் பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (19.08.2022) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்க்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்தியம் நாளை (21.08.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் துண்டுப் பிரசுரம், பதாகைகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இன்று வரை எமக்கு பல வழிகளிலும் உதவி புரிகின்ற நல்லுள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
தொலைபேசி : 077 077 4479, 077 353 5918

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 18.10.1941 — ஆண்டவன் அடியில் 01.09.2021

### அமரர் கந்தையா பழனி வேற்பிள்ளை

(உதவிக் கல்விப் பணிப்பாளர்)

திதி: அபரபக்க நவமி

அவனிவிட்டு நீங்கள் சென்று ஆண்டொன்று வந்ததப்பா
ஆயிரம் உறவுகள் அருகிருந்தாலும்
உங்களைப்போல் வந்திடுமா அப்பா!
அன்பான அதிகாரப் பேச்சும்
அரவணைப்பும், ஆற்றல்மிகு செயல்திறனும்
இழந்தோம் நாங்கள் அப்பா!
புத்திபுகட்டி புதியவை உணர்த்தி
நல்வழி காட்டும் ஆசானாய் அதிகாரியாய்
அன்பான அப்பாவாய், அருமைமிகு கணவராய்
ஆற்றிய பணியோ ஏராளம் ஏராளம்
நிறைவாழ்வு எமக்களித்து விண்ணுல கேகிய
அப்பாவே எம் உயிருள்ளவரை உங்கள் நினைவோடு
வாழ்ந்திடுவோம் நாமே.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

86/4,சம்பியன் லேன்,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்தியில் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. A-9 வீதியில் இருந்து 100 M தூரத்தில், யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடம் கைதடி ஆயுள் வைத்தியசாலை. பின் எல்லைகள் மூன்று வழிப்பாதையுடன்.

தொடர்பு: 077 6234 204

(CS 20075) 1-6

## பொதுக் கூட்டம்

வண்மேற்கு ஸ்ரீஅங்குசபாச (கீரிப்) பிள்ளையார் தேவஸ்தானத்தின் ஆண்டு பொதுக்கூட்டம் எதிவரும் (04.09.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் தலைவர் தலைமையில் நடைபெறும். அங்கத்தவர்கள் தவறாது கலந்துகொள்ளவும்.

செயலாளர்.
சொ.முகுந்தன்

## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 . 09 . 1931 — மறைவு 21 . 08 . 2003



### அமரர் பொன்னையா பாலசிங்கம்

(Rtd. Superietendant of Audit)

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்து - எம்மை
அவனியிலே வாழ்வாங்கு வாழ வைத்த தந்தையே!
பத்தொன்பதாம் ஆண்டு நினைவு நாளில் - உம்மை
நினைந்து வணங்குகின்றோம் - அப்பா!

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டி.

166/3, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

(cs.20349) (2.6)

## தவறான முடிவெடுத்து குடும்பஸ்தர் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஒக.20

குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் புங்குடுதீவு, மூன்றாம் வட்டாரத்தில் நடந்துள்ளது. உயிரிழந்தவர் இரு பிள்ளைகளின் தந்தை என்றும், சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-23)

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 12 . 1955 — மறைவு 19 . 08 . 2022



### ஐயம்பிள்ளை சந்திரசேகரம் (மெக்கானிக்)

நவக்கிரி புத்தூரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை சந்திரசேகரம் நேற்று (19.08.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற துரைராசா சிதம்பரம் தம்பதியரின் மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், பன்னீர்தாஸ் (பிரான்ஸ்), அமரர் சுகதீபா, டர்சிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தினி (பிரான்ஸ்), அமரர் சுரேஸ்குமார், செல்வக்குமரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கபிஷன், தஸ்மிகா, அஸ்விகா ஆகியோரின் பாசமிகு பேரனும் அமரர் பத்மாவதி, அமரர் கந்தசாமி, ராசரட்ணம் (கனடா), சண்முகம், நல்லம்மா (கனடா), சுப்பையா, பாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அமரர் தங்கரத்தினம், பாலையா, அமரர் இரத்தினம், சரஸ்வதி (கனடா), தியாகராசா (சுவிஸ்), இராஜேஸ்வரி, கணேசலிங்கம் (கனடா), சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 209 1417

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 - 09 - 1944 — மறைவு 19 - 08 - 2022



### திருமதி ராசரத்தினம் பூமலர்

குருக்கள் வளவு குப்பிளான் வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராசரத்தினம் பூமலர் நேற்று (19.08.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ராசரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், ஜெனார்த்தனன், சாமினி (UK), ஜெயகௌரி (UK), ஜெனந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவமலர், பகீரதன் (UK), கஜன் (UK), நதியா ஆகியோரின் மாமியும், கந்தசாமி நாகரத்தினம், செல்லையா நடராஜா, சுப்பிமணியம் சௌந்தரம், அமரர் செல்லையா செல்வி பரமேஸ்வரி, சண்முகநாதன், விஜயலஷ்மி, அமரர் ராகவன் ஜெயராணி, கமலராஜா வேதநாயகி ஆகியோரின் சகோதரியும், அமரர் அட்சுதன், கௌரிகா (UK), அபிலக்ஷன் (UK), கனிகா (UK), சுருதிகா (UK), சினேகன் (UK), தஸ்வின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக குப்பிளான் கரம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 20388) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபூதராயர் ஆலய அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஓக. 20

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலய அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் தினமும் மாலைவேளை சுவாமி வீதிவலம் வருவார். எதிர்வரும் 29ஆம் திகதி சங்காபிஷேகமும் திருவூஞ்சலும் நடைபெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### உரிமைக் ....

சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பிராந்தியக் காரியாலயம் தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பதிவொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே பயங்கரவாத புலனாய்வுப் பிரிவில் அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற செய்திகள் மிகுந்த கவலையளிக்கின்றன.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த சுமார் 10க்கும் மேற்பட்டோர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டனர். குடியியல் உரிமைகளுக்காகப் போராடுபவர்களுக்கு எதிராக கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை பயன்படுத்தவேண்டாம் என்று சிறிலங்கா அரசாங்கத்தை சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்துகிறது. அதற்குப் பதிலாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்ய அரசாங்கம் முயலவேண்டும். போராட்டக்காரர்களைத் தன்னிச்சையாகத் தடுத்து வைப்பது மற்றும் பயங்கரவாதம் அல்லாத அவர்களின்மீது நியாயமற்ற வகையில், கடுமையான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவது போன்றன சர்வதேச சட்டத்துக்கு எதிரானவை என்று அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-எ-இ)

### உணவு...

பேராசிரியர் புத்தி மாரம்பேவையை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்டுள்ள அந்தச் செய்தியில், இந்த நெல் பற்றாக்குறை, உணவுப்பாலத்தில் பெரும் இடைவெளியைத் தோற்றுவித்து, ஆரோக்கியக் குறைவை அதிகரிக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சிறிலங்காவின் இந்த நிலைமைக்கு உரம் மட்டுமின்றி, எரிபொருள் சிக்கலும் தாக்கம் செலுத்தியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அரிசியில் தன்னிறைவுபொருளாதாரம் கொண்ட சிறிலங்கா இன்று அரிசிக்காக ஏனைய நாடுகளை நம்பியுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. (அ-எ-இ)

### சுகாதாரக்...

இந்த நிலை பாதித்துள்ளது என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின் உபகரணங்கள், மருந்து பற்றாக்குறை காரணமாக நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் கர்ப்பிணிப் பெண்கள் போசாக்கற்ற உணவு மற்றும் உணவுத் தட்டுப்பாட்டால் பெரும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியத்தின் நிர்வாக இயக்குநர் நடால்யா கனெம்மையை மேற்கோள்காட்டி ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

### பயங்கரவாதத்...

தெரிவித்தார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கும், கல்வி அமைச்சருக்கும் இடையே நேற்று மதியம் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே கல்வி அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் மற்றும் செயலாளராகப் பதவி வகித்த பபில்ராஜ், திவாகர் ஆகிய இருவர் மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மாணவர் ஒன்றியத்தின் அறையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவான ஒளிப்படங்கள் இருந்தன என்று தெரிவித்தே அவர்கள் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. அவர்கள் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறியுள்ளபோதும், இன்னமும் வழக்கு விசாரணைகளை எதிர்கொண்டுள்ளனர். அவர்களின் வழக்குகளை விரைவாக முடிக்க வேண்டும் என்று கோரினர்.

அங்கு கருத்துத் தெரிவித்த கல்வி அமைச்சர், மாணவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதை ஏற்க முடியாது. வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் பலர் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். விரைவில் இந்தச் சட்டம் நீக்கப்படவுள்ளது. இந்த இரு மாணவர்கள் தொடர்பாக நான் சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டு அவர்களை விரைவாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என்று தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில், யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க, மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கலந்து கொண்டனர். (அ-எ-125)

### அரசுக்கு...

இவர்கள் மூவரையும், 90 நாள்களுக்குத் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என்று அறிய முடிகின்றது.

கைது செய்யப்பட்டுள்ள வசந்த முதலிகே, கல்வெவ சிறிதம்ம தேரர் மற்றும் ஹஷாந்த ஜீவந்த குணதிலக்க ஆகியோரிடம், போராட்டக்களத்தில் ஏப்ரல் 9 ஆம் திகதியிலிருந்து இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில், தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் 19 பேர் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டனர். முறையற்ற விதத்தில் ஒன்றுகூடிய குற்றச்சாட்டில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கறுவாத்தோட்டம், கொம்பனித் தெரு, பொரளை பொலிஸ் பிரிவுகள் மற்றும் களனி பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவு என்பனவற்றால் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். இதே வேளை கொழும்பில் நடைபெற்ற எதிர்ப்புநடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் 16 உறுப்பினர்கள் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ-எ-22)

### வவுனியாவில்...

ஒவ்வாத செயல்கள் நடைபெறுகின்றன என்று கிடைத்த தகவல்களுக்கு அமைய பொலிஸார் திடீரென முற்றுகையிட்டுச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர் .

வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவினரும், மது ஒழிப்புப் பிரிவுப் பொலிஸாரும் இந்தச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், சோதனை நடவடிக்கையில் மோப்ப நாயும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

விடுதியில் தங்கியிருந்த இரு பெண்கள், விடுதி முகாமையாளரான ஓய்வு பெற்ற இராணுவச் சிப்பாய் உட்பட நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்த விடுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி - 56 ரக துப்பாக்கிக்குரிய 30 ரவைகளும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த விடுதியிலிருந்து இரகசியமாகத் தப்பியோடும் வகையில் சுவரில் சூட்சுமமான முறையில் வழியொன்றும் அமைக்கப்பட்டிருந்தமை சோதனை நடவடிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. இந்த விடுதி ஓய்வு பெற்ற இராணுவச் சிப்பாய் ஒருவருடையது என்றும், கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-110-18)

### கொரோனா...

வரும், 60 வயதுக்குட்பட்ட ஆண் ஒருவரும், 60 வயதுக்குமேற்பட்ட 4 பெண்களும் அடங்குகின்றனர். (அ-எ-இ)

### சிறிலங்காவை...

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, நேர்மை மூன்றையும் பின்பற்றாததால், இலங்கையின் ஜனநாயகம் பெரியளவில் சிதைவடைந்துள்ளது. சட்டத்தின் ஆட்சி படிப்படியாகச் சீர்குலைந்து, நீதித்துறையில் அரசியல் தலைவர்களின் தலையீடானது, நீதியை ஒரு பிரச்சினையாக மாற்றியுள்ளது.

ஊழலைச் செய்து ஒரு சில குடும்பங்கள் மட்டுமே முடிவில்லாமல் சம்பாதித்து வருகின்றன. பல குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன. மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருகின்றன. இவற்றுக்கு எதிராக மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும்போது, அவர்கள் அடக்குமுறைக்கு ஆளாகின்றனர்.

இந்தத் தவறுகள் சரி செய்யப்படுவதை உறுதிப்படுத்த, சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். தவறான கொள்கைகளாலும், தவறான பொருளாதார நிர்வாகத்தாலும், நிதி நெருக்கடி, கடுமையாக மாறியுள்ளது.

அரசாங்கங்களின் தவறான திட்டங்களால் நாட்டில் பெரும் கடன் பிரச்சினை ஏற்பட்டு, அதிலிருந்து எப்படி மீள்வது என்று தெரியாமல் மக்கள் தடுமாறுகின்றனர். தேசிய வருமானமும், உற்பத்தித்திறனும் குறைந்துள்ளதால் அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாத நிலை இலங்கையர்களுக்கு ஏற்பட்டுள்ளது - என்றார். (அ-எ-இ)

### நாட்டைக்...

தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. தற்போது நிலவும் சூழ்நிலையில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டம் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரப்பிரசாதங்கள் மற்றும் சலுகைகளைப் பெறுவதற்குப் பதிலாக பிரயோகரீதியாகத்தலையிட்டு நாட்டைக் கட்டியெழுப்புவதே எனது நோக்கமாகும். அரசாங்கம் கொண்டு வரும் நேர்மறையான, முற்போக்கான முன்மொழிவுகளை ஆதரிக்கும் வகையில் ஒரு வேலைத்திட்டம் வடிவமைக்கப்படும்.

ஒருபோதும் மக்களின் எண்ணங்களுக்கும், விருப்பங்களுக்கும் துரோகம் இழைக்கமாட்டேன். அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டு கையிருப்பில் எஞ்சியுள்ள டொலரை அழிக்கும் செயற்பாட்டுக்கு ஒருபோதும் பங்களிக்கப்போவதில்லை. தற்போது அனைத்துத் துறைகளிலும் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்பப் பதவிகள் அவசியமில்லை - என்றார். (அ-எ-22)

### ஐ.நா....

காலை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க. மகேசனைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. சந்திப்பில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கரும் உடனிருந்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள டேவிட் மெக்லக்லன் கார், தற்போதைய பொருளாதார சூழ்நிலை காரணமாக மக்களின் வாழ்வாதாரம் மற்றும் கடற்றொழிலுக்கு ஏற்பட்டுள்ள சவால்கள் என்பவை தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டேன் என்று தெரிவித்துள்ளார். (அ-எ-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சின்னையா பாலச்சந்திரன் (சந்தனா)



**தோற்றம்**
**19.09.1969**

**மறைவு**
**18.08.2022**

அல்லாரை தெற்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பாலச்சந்திரன் (சந்தனா) கடந்த (18.08.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னையா காலஞ்சென்ற மகேஸ்வரி தம்பதியினரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற யோகராசா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், பிறேமகலா அவர்களின் ஆருயிர் கணவரும், ஹம்ஷிகா (A/L 2022 யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஆர்நிகன் (A/L 2024 யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நாகராசா (நோர்வே), பாலகிருஷ்ணன் (சுவிஸ்), ஞானச்சந்திரன், (நோர்வே), சந்திரவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரஜனி (நோர்வே), விஜிதா (சுவிஸ்), பிரபாலினி (நோர்வே), பரமானந்தம், தயாபரன், யோகேஸ்வரன் (கனடா), தங்கராணி, யோகராணி (கனடா), தவயோகராணி, தவயோகேஸ்வரி (கனடா), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்
077 271 9275



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.